IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.323/2024

dated : 26.02.2026

P.W. 1

Name கணேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 2 ம் வகுப்புவரை படித்துள்ளேன். உள்ளூரில் கொத்தனார் வேலைக்குச் செல்வேன். வெளியூரில் தங்கியிருந்தும் வேலை பார்ப்பேன். எதிர்வழக்குரை விவரங்களை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். வழக்குரைச் சொத்துக்கள் என் தாத்தா குலசேகர பெருமாளுக்கு பாத்தியப்பட்டது. குலசேகர் பெருமாள் சொத்து அவரது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது. குலசேகர பெருமாள் சொத்து என்பதை நிரூபிக்க ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவரது தகப்பனாருடையது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 09.06.1961 ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆவணம் எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் செய்துகொண்ட பாகப் பத்திரம் என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு 15 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் என் தந்தைக்கு 2 வது தபசில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. 2 வது தபசில் சொத்து வீட்டு மனை ஆகும். அதில் 5 செண்டில் 4

செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது. வழக்குரைச் சொத்தில் அதை 5 செண்டாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வடக்கேயுள்ள என் பெரியப்பா சொத்தையும் சேர்த்து 5 செண்டாக குறிப்பிட்டுள்ளேன். என் பெரியப்பா பெயர் திரியன்புத்தேவர். என்னிடம் காட்டப்படும் இறப்பு சான்றிதழ் அவருடையதுதான் அது **பி.சா.ஆ.1** ஆகும். திரியன்புத்தேவர் எனக்கோ என் தந்தைக்கோ ஆவணம் ஏதும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். என் பெரியப்பாவின் ஒரு செண்ட் நிலத்தை பொறுத்து ஆவணம் ஏதும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். திரியன்புத்தேவருக்கு 2 மனைவிகள். முதல் மனைவி திரியன்புத்தேவர் உயிருடன் இருக்கும்போதே இறந்துபோனார் இரண்டாவது மனைவி திரியன்புத்தேவர் காலமான பிறகு இறந்துபோனார். திரியன்புத்தேவரின் 2 வது மனைவி பலவேசத்தம்மாள் இறப்பு சான்று **பி.சா.ஆ.2** ஆகும். பலவேசத்தம்மாளின் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. அவர்களில் யார் யார் உயிருடன் இருக்கிறார்கள் என்று எதுவுமே தெரியாது. திரியன்புத்தேவரின் வாரிசு சொத்துக்களை நாங்கள் ஆவணங்கள் ஏதுமில்லாமல் எங்களுடைய சொத்துக்களாக குறிப்பிட இயலாது என்றால் சரியல்ல. என் தந்தைக்கு 19 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த சொத்தை என்னுடைய வழக்குரை 2 வது தபசிலாக குறிப்பிடும்போது 38 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். திரியன்புத்தேவரின் சொத்தையும் சேர்த்து அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். அதே போலவே 3 முதல் 6 தபசில் சொத்துக்களையும் திரியன்புத்தேவரின்

சொத்துக்களையும் சேர்த்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். திரியன்புத்தேவரின் மனைவி பலவேசத்தம்மாள் எனக்கோ என் தந்தைக்கோ ஆவணம் ஏதும் எழுதிக் கொடுக்கவில்லை. என் தந்தைக்கு ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் தவிர வழக்குரைச் சொத்துக்களை பொறுத்து வேறு ஆவணங்கள் இல்லை. என் தந்தை உயிருடன் இருந்தபோதே பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட 4 செண்ட் நிலத்தையும் மனைவி, குழந்தைகளுக்கு எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அவர்கள் பெயர் வள்ளியம்மாள், முருகையா, திருமலைக்குமார் என்றால் சரிதான். பட்டாவும் அதனடிப்படையில் மாற்றப்பட்டு தீர்வையும் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 செண்ட் நிலத்தில் உள்ள வீட்டில் நாங்கள் குடியிருந்தபோது என் பெயரும் ஆதியில் குடும்ப அட்டையில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் இருந்தது. அதனடிப்படையிலேயே வாக்காளர் அடையாள அட்டையும் ஆதார் அடையாள அட்டையும் வழங்கப்பட்டது என்றால் சரிதான். 105 கதவு எண் ஆகும். வழக்குரை 3 வது தபசில் சொத்தில் கதவு எண், மின் இணைப்பு எண் ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 3 வது தபசில் சொத்தில் யாரும் குடியிருக்கவில்லை என்றால் சரிதான் 10 மாதங்களாக குடியிருக்கவில்லை மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் குடியிருக்கவில்லை. அது குடியிருப்புக்கு ஏற்ற இடமல்ல என்றும் அது வீடாக ஒருபோதும் பயன்படுத்தப்பட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தைக்கு நாங்கள் பிறக்கும் 15 ஆண்டுகளுக்கு முன்பே பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தில் நாங்கள் பங்குரிமை ஏதும் கோர

இயலாது என்றால் சரியல்ல. திரியன்புத்தேவரின் வாரிசுகள் தரப்பினராக இல்லாத நிலையிலும் அவர்கள் எங்களுக்கு ஆவணம் ஏதும் எழுதிக் கொடுக்காத நிலையிலும் அவருடைய சொத்துக்களையும் சேர்த்து நான் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. திரியன்புத்தேவரின் வாரிசுகள் அனைவரும் வழக்கின் தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான். பலவேசத்தம்மாளின் உடன் பிறந்தவர்களையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்குரை 1 வது தபசில் சொத்திற்கு நான் தீர்வை ஏதும் செலுத்தவில்லை. வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றின் அடிப்படையில் நான் குடியிருந்து வருவதாக கூறுவது அடிப்படையற்றது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு அடிப்படையற்றது என்றும் ஆவணங்களுக்கெதிரானது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.26 17:53:58 +0530